(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.394/2022 PW 1

Name மணி

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

18.10.2023.

முதல் விசாரணை தொடர்ச்சி

எனது முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலமாக உள்ளது. கடந்த 14.02.2018 தேதி அன்று தாவா சொத்தை பிரதிவாதிகள் சுதர்சன் மற்றும் அப்பர்ணாவிற்கு கிரையம் எழுதி கொடுத்தேன் அந்த அசல் கிரைய பத்திரம் வாதசாஆ 1. 06.02.2018 முதல் 01.02.2021 வரை தாவா சொத்துக்குரிய வில்லங்க சான்று தாக்கல் செய்கிறேன் அது வாதசாஆ 2. கிரைய பத்திரத்தில் கிரைய தொகையாக இரண்டு காசோலைகள் கொடுப்பதாக பிரதிவாதிகள் சொல்லியிருந்தார்கள் ஆனால் அதுபோல் காசோலை எதுவும் கொடுக்கவில்லை எனவே எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகள் 1 மற்றும் 2ற்கு அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பின் அலுவலக நகல் வாதசாஆ 3. அந்த அறிவிப்பை இரண்டு பிரதிவாதிகளும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் வாதசாஆ 4 வரிசை. தாவா படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.